குறுந்தொகையில் இயற்கையும் சுற்றுச்சூழலும்

முனைவர் மு. பார்வதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ குமர குரபர சுவாமிகள் கலைக்கல்லூரி, திருவைகுண்டம்
DOI: https://doi.org/10.5281/zenodo.19220517

முன்னுரை

சங்க இலக்கியம் உலக இலக்கியங்களின் இமயம். சங்க இலக்கியம் தோன்றிய காலத்தில், உலக மொழி இலக்கியங்களில் சங்க இலக்கியம் போன்ற பாடல்கள் தோன்றவில்லை. சங்க இலக்கியங்கள் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என இரு நிலைகளில் உள்ளன. எட்டுத்தொகை நூல்களுல் ஒன்று குறுந்தொகை. இதனை நல்ல குறுந்தொகை எனப் புலவர் பாராட்டுவர். குறைந்த அடிகளையுடைய பாடல்களை உடையது. நான்கு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை அமைந்துள்ள பாடல்கள் இவை. குறுந்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் புரிக்கோ. குறுந்தொகை காட்டும் இயற்கையையும் சுற்றுச் சூழலையும் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

சங்கப் பாடல்களில் இயற்கை

சங்கப் புலவர்கள் இயற்கை ஈடுபாடு மிக்கவர்கள். அவர்களது அகம், புறம் என்ற இருவகைப் பாடல்களிலும் இயற்கை சிறப்பிடம் பெறுகிறது. உவமை, உள்ளுறை, இறைச்சி என்ற அணிகளுக்காகவும், மனித உணர்வுகளுக்குரிய பின்னணிக்காகவும் இயற்கைப் பொருட்களையும், நிகழ்ச்சி களையும் அமைத்துப் புலவர்கள் பாடல்கள் இயற்றியுள்ளனர்.

அகப் பொருட் பாடல்களில் ஐந்திணை

முதல், கரு, உரி என்ற முறை அமைப்பில் முதற்பொருளில் நிலமும் பொழுதும், கருப்பொருளில் அந்நிலத்து மக்கள், விலங்கு, பறவை முதலிய இயற்கைச் செய்திகளும் இடம் பெறுகின்றன. இதனால் அகப்பொருட் பாடல்களில் முதல், கரு என்ற இரு பொருளிலும் இயற்கையே ஆளுமை பெற்றிருக்கக் காணலாம். இம்முதல், கருப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணையும் தனித்தனியாகப் புனையப்படுதலை அகப்பொருட் பாடல்களில் காணலாம்.

புறப்பொருட் பாடல்களில் நில வருணனை

புறப்பொருட்பாடல்களில் நாடு, மலை, கடல், வயல், காடு, ஆறு, ஊர் எனத் தனித்தனியே வருணனை இடம் பெறுகிறது. உழபுலவஞ்சி, மழபுலவஞ்சி என்ற துறைப் பாடல்களில் அழிவுறப்போகும் நாட்டின் நிலவருணனை அமைவதுண்டு. மன்னனைப் பாடும்போது அவன் நானிலமும் உடையவன் என்பது குறிப்பாகக் கூறப்படுவதைப் புறநானூற்றில் பிறதுறைப் பாடல்களில் காணலாம்.

குறுந்தொகையில் இயற்கை எழில்

இயற்கையின் அழகையும் அற்புதங்களையும் காணும் போது அவற்றின் அழகில் மனதைப் பறிகொடுக்கிறோம், பரவசமாகிறோம். எத்தனை கோடி இன்பம் இயற்கையில் என வியக்கிறோம். குறுந்தொகையில் இயற்கை காதலுணர்வுடன் (அகம்) பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளது. நிலம், பொழுது, செடி, கொடி, விலங்குகள், பறவைகள் ஆகியவை வெறும் பின்னணியாக

மட்டுமின்றி, தலைவன் தலைவியின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கருவிகளாகவும், தூதுவனாகவும் காதலுக்குத் துணையாகவும் பாடல்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

குறிஞ்சித்திணையில் இயற்கை

குறுந்தொகை குறிஞ்சிப் பாடல்கள் மலையும் மலை சார்ந்த இடத்தையும் பின்னணியாகக் கொண்டு, தலைவன் - தலைவியின் புணர்தல் மற்றும் காதல் உறவைச் சிறப்பிக்கும் சங்கப் பாடல்களாகும். இயற்கை வர்ணனைகளுக்கு இடையே காதலின் உன்னதத்தை, இயற்கைப் புணர்ச்சி, களவு ஒழுக்கம், வரைவு (மணம்) ஆகியவற்றை உணர்வுப்புர்வமாக எடுத்துரைக்கின்றன. குறிஞ்சி மரம், மந்தி, யானை, அருவி, மூங்கில், முருகன் வழிபாடு, பாறை, அகில், தேன் போன்றவை குறிஞ்சி நிலத்தின் இயல்பை உணர்த்துகின்றன.

"செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே" (குறுந்தொகை பா.எ.40) - முன்னறியா தலைவனும் தலைவியும் அன்பால் ஒன்றுபடுவதை, செம்மண்ணில் பெய்த மழைநீர் பிரிக்க முடியாமல் கலப்பது போல உவமைப்படுத் தியிருக்கிறார். தலைவன் தலைவியின் மனங்கள் கலந்த அன்பின் ஆழத்தைக் கூறும் கபிலரின் புகழ்பெற்ற பாடல்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று" (குறுந்தொகை பா.எ.2)

தலைவனுடன் கொண்ட காதல் நிலத்தை விட அகலமானது, வானத்தை விட உயர்ந்தது, கடலை விட ஆழமானது எனத் தலைவி தோழியிடம் கூறும் காதல் வெளிப்பாடாக இப்பாடல் அமைந்துள்ளது.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார் அஃது அறிந்திசி னோரே? சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே!"
(குறுந்தொகை பா.எ.18)

கபிலரின் இக்குறிஞ்சிப் பாடலில், தோழி தலைவனைத் திருமணம் செய்துகொள்ள வற்புறுத்துகிறாள். பக்கமலையில் உள்ள பலாவினது சிறிய கிளையில் பெரிய பலாப்பழம் தொங்குவதைப் போல் தலைவியின் சிறிய உயிர் தலைவன் மீது வைத்த எல்லையற்ற அன்பினால் தலைவி உயிருக்கு ஆபத்து நேரலாம். தலைவன் ஊரிலுள்ள பலாமரங்களோ வேலியால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அதேசமயம் அந்தப்பலா மரங்கள் கொம்புக்கு ஆபத்தில்லாத வேர்ப்பலாக்கள். பாதுகாப்பான வேர்ப்பலாக்கள் நிறைந்த சாரலைச் சேர்ந்த தலைவனுக்குக் கொம்புப் பலாவால் கொம்புக்கு ஆபத்து என்பது தெரியுமோ? எனவே தான் செவ்வியை ஆகுமதி என்கிறாள் தோழி.

"யாரும் இல்லை தானே கள்வன்
தான் அது பொய்ப்பின், யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு, தான்மணந்த ஞான்றே."
(குறுந்தொகை பா.எ. 25)

தலைவன் தன்னைக் களவில் கூடிய நேரத்தில் சான்றாவார் எவரும் இல்லை. கள்வனாகிய அவன் மட்டும் இருந்தான். அவன் பொய் சொன்னால் நான் என்ன செய்ய முடியும்? அவன் பொய் சொன்னால் நான் என்ன செய்ய முடியும்? அவன் என்னைக் களவுமணம் செய்தபோது தினையின் தாள்போன்ற கால்களையுடைய நாரை மட்டும் ஆரல் மீனைப் பார்த்தவாறே இருந்தது என்கிறாள் தலைவி. தலைவன் கள்வன். அவன் கூடியதை மறைத்தாலும், அந்த நாரை அதற்குச் சாட்சியாக இருக்கிறது என்று பறவையைச் சாட்சியாக்குவது கபிலரின் கவித்திறனுக்குச் சான்றாகும்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ?
பயிலியது கெழீஇய நட்பின், மயில்இயல்,

செறிஎயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ, நீ அறியும் பூவே?"
(குறுந்தொகை பா.எ.2)

தலைவன் தலைவியின் கூந்தல் மணத்தை, வண்டின் அனுபவத்தைக் கொண்டு புகழ்ந்துரைக்கும் குறிஞ்சித்திணைப் பாடல் இது. "உன் அனுபவத்தில் என் தலைவியின் கூந்தலை விட நறுமணமுள்ள பூவை நீ கண்டதுண்டா?" என வண்டிடம் தலைவன் கேட்பதாக இது அமைந்துள்ளது.

முல்லைத் திணையில் இயற்கை

குறுந்தொகையில் முல்லைத் திணைப் பாடல்கள், கார் காலத்தில் (மழைக்காலம்) தலைவன் வருவேன் என்று கூறியபடி வராதபோது, தலைவி பொறுமையுடன் காத்திருப்பதையும், தோழி அவளுக்கு ஆறுதல் கூறுவதையும் மையமாகக் கொண்டுள்ளன. மாலை நேரம், முல்லை மலர்கள், கார் மேகங்கள் ஆகியவை தலைவனின் பிரிவையும், அவள் ஏக்கத்தையும், சபிரிவாற்றாமையையும் அழகாக வெளிப்படுத்துகின்றன.

"பல்ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தெனப்
புன்தலை மன்றம் நோக்கி, மாலை
மடக்கண் குழவி அணவந் தன்ன
நோயேம் ஆகுதல் அறிந்தும்,
சேயர் தோழி! சேய்நாட் டோரே."
(குறுந்தொகை பா.எ.64)

பசுக்கள் பலவாக மேய்ச்சலுக்குச் சென்று தன் இருப்பிட மன்றத்தை நோக்கித் திரும்புகின்றன. அறியாக் கன்றுகள் வருத்தத்தோடு அவற்றின் வருகைக்காகச் சுழன்று சுழன்று வருவது போல நான் தொலைநாடு சென்ற அவர் வருகைக்காக அலைகிறேன் எனத் தலைவி தன் பிரிவாற்றாமையைத் தோழியிடம் கூறும் முல்லைத் திணைப் பாடலாகும். கன்றின் ஏக்கம், தலைவியின் பிரிவுத் துயரத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

மருதத் திணையில் இயற்கை

குறுந்தொகையில் மருதத்திணைப் பாடல்கள் தலைவன் பரத்தையரிடம் சென்று திரும்புவதால் ஏற்படும் தலைவியின் ஊடல் (கோபம்), தோழியின் தூது, மற்றும் தலைவனின் விளக்கங்களை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. வயலும் வயல் சார்ந்த இடமுமான மருத நிலத்தின் இயற்கை அழகோடு, அகவாழ்க்கையின் சிக்கல்களையும் உணர்ச்சிகளையும் இப்பாடல்கள் நுட்பமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இயற்கைப் பின்னணியில் வயல், வாளை மீன், மாம்பழம், ஞாழல் பு என அகத்துறையின் உணர்வுகள் மிக அழகாக விவரிக்கப்பட்டுள்ளன.

"மனைஉறை கோழிக் குறுங்காற் பேடை,
வேலி வெருகினம் மாலை உற்றெனப்
புகும்இடன் அறியாது தொகுபுஉடன் குழீஇய,
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு
இன்னாது இசைக்கும் அம்பலொடு
வாரல், வாழியர்! ஐயஎம் தெருவே."
(குறுந்தொகை பா.எ.139)

ஒக்கூர் மாசாத்தியார், பாடிய இப்பாடல் பரத்தையிடம் சென்ற தலைவனை, ஊர் பழிச்சொல்லுக்குஅஞ்சி, தோழி வாயிலாகத் தலைவி கடிந்துரைக்கும் மருதத்திணைப் பாடலாகும். வேலிப் புனைக்கு அஞ்சும் கோழிக்குஞ்சுகளைப் போல, தலைவியும் தலைவனின் பிரிவால் பழிச்சொல்லுக்கு அஞ்சித் துன்புறுவதை இப்பாடல் உவமையுடன் விளக்குகிறது.

நெய்தல் திணையில் இயற்கை

குறுந்தொகை நெய்தல் திணைப் பாடல்கள், கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் நிலத்தில், தலைவன் பிரிவால் தலைவி படும் துயரத்தையும் (இரங்கல்), மாலை நேரத்தில் தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதையும் முதன்மையாகக் கொண்டுள்ளன. பிரிவின் துயரம், தலைவனின் வரைவு (திருமணம்) தாமதம், மாலை நேரத்தின் கொடுமை

மற்றும் கடலோர இயற்கை காட்சிகள் மூலம் காதலின் ஆழம் உணர்த்தப்படுகிறது.

"யார் அணங் குற்றனை கடலே! புழியர்
சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன
மீன்ஆர் குறுகின் கானல்அம் பெருந்துறை,
வெள்வீத் தாழை திரை அலை
நள்ளென் கங்குலும் கேட்கும், நின் குரலே?"
(குறுந்தொகை பா.எ.163)

அம்மூவனார் பாடிய இப்பாடல் தலைவனின் பிரிவால் துயருறும் தலைவி, இரவு நேரத்தில் கடலை நோக்கித் தன் கவலையைப் பகிர்வதாகும். புழியர் மேய்க்கும் வெள்ளாடுகள் பரந்து மேய்வது போலக் கொக்குகள் மேயும் தாழை மர நீர்த் துறையில் நீரலை மோதி இரவெல்லாம் என்னைப் போலத் தூங்காமல் இருக்கிறாயே என்று தலைவி வருந்துவதாய் இப்பாடல் அமைகின்றது.

பாலைத் திணையில் இயற்கை

குறுந்தொகையில் பாலைத்திணைப் பாடல்கள், பொருள் வயின் பிரிந்த தலைவன் மற்றும் தலைவியின் துயரம், பிரிவின் கொடுமை மற்றும் தோழியின் ஆற்றுப்படுத்துதல் ஆகியவற்றை மிக உருக்கமாக விவரிக்கின்றன. பாலை பாடிய பெருங்கடுங்கோ இத்திணையில் சிறந்து விளங்குகிறார். பாலை நிலத்தின் வறட்சி, கொடுமையான வழிப்பாதை, கள்ளியங்காடு, யா மரம், ஆண் யானை பெண் யானைக்கு உதவுதல் மற்றும் தலைவியின் ஏக்கம் போன்றவை இப்பாடல்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

"உள்ளார் கொல்லோ தோழி! கள்வர்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்,
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளிஅம் காடுஇறந் தோரே?"
(குறுந்தொகை பா.எ.16)

சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோவால் இயற்றப்பட்டது. கள்வர்கள் அம்பை நகத்தால் கூர்மையாக்கும் ஓசை போன்ற சத்தத்துடன், கள்ளியங் காட்டில் பல்லி தன் துணையை அழைக்கும். இந்த கொடுமையான பாதையில் பொருள் தேடச் சென்ற தலைவன், தன் அன்பிற்குரிய தலைவியைக் கண்டிப்பாக நினைப்பான் எனத் தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறார்.

"நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மேன்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி! அவர் சென்ற ஆறே."
(குறுந்தொகை பா.எ.37)

தலைவன் சென்ற வழியில், பெண் யானையின் பசி போக்க ஆண் யானை யா மரத்தின் பட்டையை உரித்து அன்பு காட்டுவதைக் கண்டால், தலைவன் கண்டிப்பாக நம் நினைவு வந்து விரைவில் திரும்புவான் எனத் தோழி தேற்றுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

முடிவுரை

குறுந்தொகைப் பாடல்கள் பெரிதும் இயற்கையோடு இயைந்த வாழ்வினையே படம் பிடிக்கின்றன. எந்தவொரு பாடலும் இயற்கையை விட்டு விலகி நிற்பதேயில்லை. குறுந்தொகையில் இயற்கை என்பது வெறும் வர்ணனை அன்று. அது மானுட உணர்வுகளோடு ஒன்றிய ஒரு வாழ்வியல் சூழலாகும்.